1975 நவம்பர் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த ரோடு இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையிலே நீண்ட காலத்திற்கு முன்பாக அவர்களுக்கு ஒரு வழியில் 22½ மைல், இன்னொரு வழியில் 22½ மைல என்று 45 மைல் கவனிக்க வேண்டுமென்று இருக்கிறது. இப்பொழுது ரோடுகளில் அதிகமான பஸ்கள் போகிற காரணத்தால், அவைகளைக் குறைக்க ஏதாவது ஏற்பாடு செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா? அப்படி குறைக்காமலேயே ஆட்கள் குறைக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அது நிறுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் தேசிய நெடுஞ்சாலைப் பணியைப் பொறுத்தவரையில் இதுவரையில் கொடுத்துவந்த பணத்தை இப்போது குறைத்துவிட்டார்கள். அதனால் வேலைவாய்ப்பு குறைந்துவிடுகிறது. ஆகவே, கொஞ்சப் பேர்களையாவது நிறுத்த வேண்டுமென்று நிதி இலாகாவினர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு நிறுத்துவதை நிறுத்தி வையுங்கள் என்று சொல்லியதால் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் கொஞ்சப் பேர்களையாவது நிறுத்தவேண்டிய நிலைமை ஏற்படும். வேறு வழியில்லாத காரணத்தால் கொஞ்சப் பேர்களாவது நிறுத்தப்பட இருக்கிறார்கள்.

கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் குழுக்கள்

*290 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகிடும் நூல்களை விநியோகிக்கவும் விலை நிர்ணயிக்கவும் குழு ஏதேனும் நியமிக்கப் பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூல்களின் விலைகளை நிர்ணயிக்கவும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு நூல் ஒதுக்கீடு செய்வதற்கும் ஒரு நிரந்தரக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

[1975 நவம்பர் 11

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற நூலை விநியோகம் செய்யவும் விலையை நிர்ணயிக்கவும் மத்திய அரசினுடைய அனுமதி ஏதேனும் பெற வேண்டியுள்ளதா? ஆமெனில் அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்தக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இயக்குநர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள். தமிழ்நாடு மத்திய சங்கத்தினுடைய தலைவர், கோவாப்பரேடிவ் கூட்டுறவு ஆலைகளினுடைய தலைவர்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். பிரைமரி சங்கங்களைப் பொறுத்த அளவிலே அவர்களுடைய பிரதிநிதிகள் 4 பேர்கள் இதிலே போடப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஏனைய ஆலைகள் எல்லாம் லாபம் அடைகிற நேரத்திலே இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் மட்டும் நஷ்டமடைகின்றன. நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறைந்த விலையில் விநியோகம் செய்கிற காரணத்தால் இந்த நஷ்டம் ஏற்படுகிறது. இதைத் தவிர மார்க்கெட்டில் எந்த எந்தத் தரமுள்ள நூல்கள் தேவை என்று நிர்ணயித்து உற்பத்தி செய்யாததும் இதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. இவையெல்லாவற்றையும் கவனிக்கிற இந்தக் குழுவிலே நெசவாளர்களின் பிரதிநிதிகளையும் நூற்பாலை எந்த வட்டாரத்திலே இருக்கிறதோ அந்த வட்டாரத்தைச் சேர்ந்த நெசவாளர்களின் பிரதிநிதிகளைப் பொதுமக்களின் பிரதிநிதிகள் என்ற முறையிலே சட்டமன்ற உறுப்பினர்களையும் இடம்பெறச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனியார் ஆலைகள் தான் நஷ்டத்தில் நொடித்துப் போய்விடுகின்றன. ஆனால் நம்முடைய ஆலைகள் 12-ம் தைரியமாக நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் நாம் அதிகப்படியான லாபம் இல்லாமல் சந்தை விலைக்கு—மார்க்கெட் விலைக்கு—கொடுப்பது அதற்கு ஒரு காரணம். அதுமட்டுமல்லாமல்